
# டூல்ஸ்
# Tools



### செலக்ட் டூல் (Select Tool) 

செலக்ட் டூல் மூலம் ஃபைலில் உள்ள வடிவங்களை தேர்வு செய்து ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்திக் கொள்வதற்கும் இந்த டூலை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், செலக்ட் செய்த வடிவத்தின் அளவுகளை மாற்றுவதற்கும், நீக்குவதற்கும் இந்த டூல் பயன்படுகிறது. இந்த டூல் மூலம் வடிவத்தினை செலக்ட் செய்தவுடன் 4 மூலைகள் மற்றும் 4 மூலைகளின் நடுவில் 8 புள்ளிகள் உள்ளன. இந்த புள்ளிக்கு ஹாலோ ஆங்கர் பாயிண்ட் (Hollow Anchor Point) என்று பெயர். இந்த புள்ளி ஒன்றின் மீது மவுசை வைத்து ட்ராக் செய்தால் உருவத்தின் அளவு மாறுபடும். மேலும், புள்ளியை மவுசை வைத்து ட்ராக் செய்யும் போது ஷிஃப்ட் (Shift) பட்டனை அழுத்தி ட்ராக் செய்தால் வடிவத்தின் அளவு மிக சரியான விகிதத்தில் மாறுபடும்.

### டைரக்ட் செலக்ஷன் டூல் (Direct Selection Tool) 

இந்த டூல் மூலம் ஒரு வடிவத்தையோ அல்லது நாம் பென் டூல் மூலம் உருவாக்கிய வடிவத்தையோ மாற்றம் செய்து வேறொரு வடிவமாக கொண்டு வருவதற்கு பயன்படுகிறது.

## பேஜ் டூல் (Page Tool)

பல பக்கங்களில் (Page / Document) work செய்து கொண்டிருக்கும்போது, ஒரு குறிப்பிட்ட பக்கத்தை (Page) தேர்வு செய்து கொள்வதற்கு இந்த டூல் பயன்படுகிறது.

மேலும், செலக்ட் செய்த பக்கம் ஒரு தனி நிறத்தில் (Color) நமக்கு தனியே, தெளிவாகத் தெரியும்.

## கேப் டூல் (Gap Tool)

இந்த Tool ஆனது வடிவம் (or) எழுத்துகளின் அகலம் (width) மற்றும் நீளம் (height) அளவுகளை அதிகப்படுத்த அல்லது குறைப்பதற்கு பயன்படுகிறது.

## பென் டூல் (Pen Tool) 

இந்த டூல் மூலம் நமக்கு தேவையான வடிவங்களை வரைந்து கொள்ளலாம். இந்த டூலை செலக்ட் செய்தவுடன் ஒரு புள்ளி உருவாகும். பின்னர் மற்றொரு இடத்தில் கிளிக் செய்தால் மற்றொரு புள்ளி உருவாகி இரண்டு புள்ளிகளும் ஒரு கோடு மூலம் இணைக்கப்படும். இவ்வாறு நமக்கு தேவையான வடிவத்தை வரைவதற்கு, தேவையான இடங்களில் கிளிக் செய்து வரைந்து கொள்ளலாம்.

## ஆட் ஆங்கர் பாயின்ட் டூல் (Add Anchor Point Tool)

இந்த டூல் ஆனது ஒரு வடிவத்தின் மீது வைத்து செலக்ட் செய்தால் புதிதாக ஒரு புள்ளி உருவாகும். இந்தப் புள்ளியின் மூலம் அந்த வடிவத்தினை தேவையான அளவிற்கு மாற்றிக் கொள்ளலாம். இந்த டூலை வடிவத்தின் மீது எத்தனை முறை செலக்ட் செய்கிறோமோ, அத்தனை புள்ளிகள் உருவாகும்.

## டிலிட் ஆங்கர் பாயின்ட் டூல் (Delete Anchor Point Tool)

இந்த டூல் ஆனது ஆட் ஆங்கர் பாயின்ட் டூல் (Add Anchor Point Tool) போன்றதே ஆகும். அந்த டூலில் வடிவத்தின் மீது புதிதாக புள்ளி உருவாகும். ஆனால் இந்த டூலில் ஒரு புள்ளியின் மீது வைத்து க்ளிக் செய்தால் அந்த புள்ளியானது நீக்கப்பட்டு விடும். இவ்வாறாக வடிவத்தின் தேவையில்லாத பகுதியினை நீக்குவதற்கு இந்த டூல் ஆனது பயன்படுத்தப்படுகிறது.

கன்வர்ட் பாயின்ட் டூல் (**Convert Point Tool**)

இந்த டூல் மூலம் நாம் உருவாக்கிய வடிவத்தில் மாற்றம் செய்ய பயன்படுகிறது. வடிவத்திலுள்ள நேர்கோடுகளை வளைந்த கோடுகளாக மாற்ற வேண்டுமானால், நமக்கு வளைவு தேவைப்படும் இடத்தில் உள்ள புள்ளியின் மீது மவுசை வைத்து கிளிக் செய்து ட்ராக் செய்து, மவுஸ் பட்டனை ரிலீஸ் செய்தால் நேர்கோடானது வளைந்த கோடாக மாறிவிடும். பின்னர் வளைந்த கோட்டினை நேர்கோடாக மாற்ற வளைகோட்டின் மீதுள்ள புள்ளிகளை தேர்வு செய்து இரண்டு முறை க்ளிக் செய்தால் வளைகோடு நேர்கோடாக மாறிவிடும்.

டெக்ஸ்ட் டூல் (**Text Tool**) 

இது Indesignஇன் மிக முக்கியமான டூல் ஆகும். இந்த Tool மூலம் எழுத்துகளை டைப் (Type) செய்து கொள்ளலாம். எழுத்துகளை டைப் செய்வதற்கு முன்னர் மவுஸ் பட்டனை வைத்து, ட்ராக் செய்து ஒரு சதுர (அல்லது) செவ்வக பெட்டி வடிவில் Outline போட்டுக் கொள்ளலாம். எழுத்துகளை டைப் செய்யும்போது, அந்த எழுத்துகள் ஆனது அந்த சதுர (or) செவ்வக பெட்டியின் வெளியில் செல்லாமல் அதனுள்ளே டைப் ஆகும்.

இந்த டூலை செலக்ட் செய்தவுடன் இதன் மேலே இந்த டூலின் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். Alignment -ஐ மாற்றுவதற்கும், ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையேயுள்ள இடைவெளியையும், ஒவ்வொரு வரிக்கும் இடையேயுள்ள இடைவெளியை மாற்றுவதற்கும் இதிலுள்ள Option -ஐ பயன்படுத்திக் கொள்ளலாம்.

டைப் ஆன் பாத் டூல் (**Type on Path Tool**)

நமக்கு தேவையான ஒரு வடிவத்தை செலக்ட் செய்து, இந்த டூலை செலக்ட் செய்து, டைப் செய்தால், எழுத்துகள் ஆனது அந்த வடிவத்தின் Outlineஇல் டைப் (Type) ஆகும்.

பென்சில் டூல் (**Pencil Tool**) 

இந்த டூல் மூலம் புதிதாக ஒரு வடிவத்தை உருவாக்க இயலும். இந்த டூலை செலக்ட் செய்தவுடன் இதன் மேலே இதன் விவரங்கள் இருக்கும். இதனை பயன்படுத்தி பென்சிலின் நிறம் மற்றும் அளவுகளை மாற்றிக் கொள்ளலாம்.

### ஸ்மூத் டூல் (Smooth Tool)


நாம் வரைந்துள்ள கோடுகளை செலக்ட் செய்து இந்த டூலை பயன்படுத்தினால் அந்த கோடுகளின் முனையானது, கூர்மையாக இருந்தவை, மென்மையாக மாறும்.

### எரேசர் டூல் (Eraser Tool) 

நாம் உருவாக்கிய வடிவத்தில் தேவையில்லாத இடங்களை நீக்குவதற்கு இந்த டூல் பயன்படுகிறது. வடிவத்தினை க்ளிக் செய்து இந்த டூலை செலக்ட் செய்து ட்ராக் செய்தால் வடிவத்தில் பகுதிகள் நீங்கிக் கொண்டே வரும்.

### லைன் டூல் (Line Tool) 

நமக்கு தேவையான இடத்தில், தேவையான அளவில் கோடு போட்டுக் கொள்ள இந்த டூல் பயன்படுகிறது. இந்த டூலை செலக்ட் செய்தவுடன் இதன் மேல் பகுதியில் இதனுடைய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இதிலுள்ள Option-ஐ பயன்படுத்தி கோடுகளின் வகைகள் மற்றும் அளவுகளை மாற்றிக் கொள்ளலாம்.

### ரெக்டாங்கிள் ஃபிரேம் (Rectangle Frame) 

இதனை செலக்ட் செய்தவுடன் ஒரு சதுர ஃபிரேம் வரும். இதனுள் எழுத்துகளை டைப் செய்யும்போது எழுத்துகள் ஆனது அந்த ஃபிரேமை விட்டு வெளியே வராது. இந்த இடத்தில் ஒரு படத்தை தேர்வு செய்தால் அது ஃபிரேமினுள் சரியாக பொருத்தப்படும்.

### எலிப்ஸ் ஃபிரேம் டூல் (Ellipse Frame Tool)

இந்த டூலும் ரெக்டாங்கிள் ஃபிரேம் டூலை போன்றதாகும். எனினும் அது சதுர வடிவில் இருக்கும். இது வட்ட வடிவில் இருக்கும். இந்த டூலை செலக்ட் செய்து, தேவையான இடத்தில் ட்ராக் செய்தால், நீள்வட்டமாக கிடைக்கிறது. கீ போர்டில் ஆல்ட் (Alt) பட்டனை அழுத்திக் கொண்டு ட்ராக் செய்தால், ட்ராக் செய்த இடத்தை மையப் புள்ளியாக வைத்து நீள்வட்டம் நமக்கு கிடைக்கிறது. கீ போர்டில் ஷிப்ட் (Shift) பட்டனை அழுத்திக் கொண்டு ட்ராக் செய்தால் வட்டமாக கிடைக்கிறது.

பாலிகன் ஃபிரேம் டூல் **(Polygon Frame Tool)**

இந்த டூல் ஆனது ரெக்டாங்கிள் ஃபிரேம், எலிப்ஸ் ஃபிரேம் போன்றதாகும். ஆனால் இதன் வடிவம் மட்டும் மாறுபடும். மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட வடிவங்கள் உருவாக்குவதற்கு இந்த டூல் உதவுகிறது. மேலும், இந்த டூல் மூலம் நட்சத்திரம் போன்ற வடிவங்களையும் பெற முடியும்.

ரெக்டாங்கிள் டூல் **(Rectangle Tool)**

இந்த டூல் மூலம் ஒரு சதுர வடிவத்தை வரைந்து கொள்ளலாம். இந்த வடிவத்தில் நிறம் நிரப்ப விரும்பினால் இதன் மேல் இதன் Options இருக்கும். இதனை செலக்ட் செய்து, நிறம் (Color) நிரப்பிக் கொள்ளலாம்.

எலிப்ஸ் டூல் **(Ellipse Tool)**


இதன் மூலம் ஒரு வட்ட வடிவத்தையோ அல்லது முட்டை மாதிரியான வடிவத்தையோ வரைந்து கொள்ளலாம்.

பாலிகன் டூல் **(Polygon Tool)**

இக்கருவி மூலம் ஒரு முக்கோண வடிவத்தையோ, அல்லது ஒரு நட்சத்திர வடிவத்தையோ வரைந்து கொள்ளலாம்.

ரொடேட் டூல் **(Rotate Tool)** 

இதன் மூலம் ஒரு வடிவத்தை நமக்கு தேவையான திசையில், தேவையான கோண அளவில் மாற்றிக் கொள்ளலாம். மேலும், இந்த டூல் மூலம் உருவம் (Shape), அது நிறுத்தப்பட்டுள்ள ஃப்ரேம் ஆகிய இரண்டையும் சேர்த்து, சுழற்றுவது, உருவம் மட்டும் சுழற்றுவது, உருவத்தை நகர்த்தாமல் ஃபிரேம் மட்டும் சுழற்றுவது போன்ற மாற்றங்களை செய்யலாம்.

சிசர்ஸ் டூல் **(Scissors Tool)** 

இந்த டூல் ஆனது cut செய்வதற்கு பயன்படுகிறது. உதாரணமாக ஒரு Rectangle Shap -ஐ நடுவே cut செய்ய விரும்பினால், அதன் மேல் முனையில் (Top) ஒரு Click (க்ளிக்) கீழ் முனையில் (Bottom) ஒரு க்ளிக் செய்தால் ஒரு சின்ன line போன்று தெரியும். பின்னர் Selection -ஐ பயன்படுத்தி மூவ் செய்தால் cut செய்த பகுதி தனியே பிரிந்து விடும்.

ஸ்கேல் டூல் **(Scale Tool)**


இதன் மூலம் நாம் உருவாக்கிய வடிவத்தினை பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ மாற்றிக் கொள்ளலாம்.

ஷியர் டூல் **(Shear Tool)**

ஒரு வடிவத்தினை எந்த வகையிலும், எந்தப் பக்கமாக வேண்டுமானாலு திருப்பிக் கொள்வதற்கு இந்த Tool பயன்படுகிறது.

ஃப்ரீ ட்ரான்ஸ்ஃபார்ம் டூல் **(Free Transform Tool)**

நாம் உருவாக்கிய வடிவத்தின் அளவுகளை மாற்றுவதற்கு பயன்படுகிறது மேலும், அந்த வடிவத்தின் கோணங்களின் அளவுகளை மாற்றுவதற்கும் இந்த டூ பயன்படுகிறது.


க்ரேடியண்ட் டூல் **(Gradient Tool)** 

இதன் மூலம் ஒரு வடிவத்தில் பலவகையான Colorகளை நிரப்ப முடியும் இதிலுள்ள Color-ஐ மாற்ற விரும்பினால் இதன் மேலே Windowவில் உள்ள கட்டளையில் க்ரேடியண்டை க்ளிக் செய்தால் அதனுள் இருக்கும். இதனை இரண்டு முறை க்ளிக் செய்தால் நமக்கு தேவையான நிறத்தை செலக்ட் செய்து நா க்ரேடியண்ட்டில் நிறம் நிரப்பிக் கொள்ளலாம்.

மேலும், ஒரு வடிவத்திலுள் நிறம் (Color) நிரப்பும் போது, ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு அடர் வண்ணத்திலிருந்து, மெல்லிய நிறமும், மெல்லிய நிறத்திலிருந்து, அடர் வண்ணமும் நிரப்புவதற்கு இந்த டூல் உதவுகிறது.

க்ரேடியண்ட் ஃபெதர் டூல் **(Gradient Feather Tool)**

இந்த Tool-உம் க்ரேடியண்ட் டூலை போன்றதாகும். ஆனால் இதனை பயன்படுத்தி நிறம் (Color) நிரப்பும்போது அது Background Color உடன் merge ஆகி தெரியும்.

நோட் டூல் **(Note Tool)** 

இந்த Tool ஆனது சில இடங்களில் குறிப்பு எழுதுவதற்கு பயன்படுகிறது. பல ஃபைலில் (பக்கங்கள்) Work செய்யும்போது, நம் தேவைக்கேற்ப, தேவையான இடங்களில் Notes (குறிப்பு) எடுத்துக் கொள்ளலாம்.

ஐ டிராப்பர் டூல் (**Eye Dropper Tool**) 

இந்த டூல் ஆனது நிறத்தை செலக்ட் செய்வதற்கு பயன்படுகிறது. ஒரு புகைப்படத்தில் உள்ள ஏதாவது ஒரு வண்ணத்தை Foreground Color ஆக தேர்வு செய்ய இந்த டூல் பயன்படுகிறது.

மெஷர் டூல் (**Measure Tool**)


இந்த டூல் மூலம் நாம் உருவாக்கிய வடிவத்தின் அளவுகளை தெரிந்து கொள்வதற்கு பயன்படுகிறது.

ஹேண்ட் டூல் (**Hand Tool**) 

நமது Page உள்ள வடிவத்தை நான்கு திசைகளிலும் பார்ப்பதற்கு இந்த டூல் ஆனது பயன்படுகிறது.

ஸூம் டூல் (**Zoom Tool**) 

ஸூம் டூலை செலக்ட் செய்து ஃபைலை பார்த்தால், அதனை பெரியதாகவோ, சிறியதாகவோ பார்க்கலாம்.

ஃபில் கலர் (**Fill Color**) 

இதனை செலக்ட் செய்து வடிவத்தில் உள்ள Color-ஐ மாற்ற முடியும்.

ஸ்ட்ரோக் கலர் (**Stroke Color**) 

ஸ்ட்ரோக் என்பது நாம் உருவாக்கிய வடிவத்தின் Outline ஆகும். இந்த Outline, Color மற்றும் அளவுகளை நமக்கு தேவையான அளவில் மாற்றிக் கொள்ளலாம்.

நிறம் நிரப்ப (**Apply Color**)

இதனை செலக்ட் செய்து நமக்கு தேவையான Color -ஐ செலக்ட் செய்து கொள்ளலாம்.


### பலவகை நிறங்கள் நிரப்ப (Apply Gradient)

இதனை செலக்ட் செய்து பலவகையான நிறங்களை செலக்ட் செய்து, க்ரேடியண்ட்டை நிரப்பிக் கொள்ளலாம்.

### நிறம் நிரப்பாமல் இருக்க (Apply Nun Color)

இதனை Select செய்தால் எந்த Color-ம் Apply ஆகாது. வடிவம் ஆனது வெற்றிடமாக இருக்கும்.


■■■



# மெனு


# Menu

## ஃபைல் (File)





### நியூ (New)

இதனை க்ளிக் செய்தவுடன் மூன்று Options தெரியும். (Document, Book, Library.) இதில் நமக்கு தேவையானவைகளை க்ளிக் செய்து கொள்ளலாம். நாம் ஃபைலை தேர்ந்தெடுத்து, அந்த ஃபைலில் எத்தனை பக்கங்கள் (Page), எந்த அளவு, மேலும், கீழும் உள்ள இடைவெளி எந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்பதை இக்கட்டளை மூலம் தேர்வு செய்யலாம்.



## ஒப்பன் (Open)

இதனை செலக்ட் செய்தவுடன் நாம் ஏற்கனவே, Indesign File இல் work



செய்த ஃபைல்கள் வரும். இதில் நமக்கு தேவையான ஃபைலை தேர்வு செய்து கொள்ளலாம்.

## பிரவுஸ் இன் பிரிட்ஜ் (Browse in Bridge)

நமக்கு தேவையான ஃபைல்களை, குறிப்பாக படங்கள் மற்றும் அவை எங்குள்ளது என்பதை பார்ப்பதற்கும் அந்த படத்தின் தரம் ஆகிய விவரங்களை தெரிந்து கொள்வதற்கும் இந்த பிரவுஸ் Option பயன்படுகிறது.

## ஓபன் ரீசென்ட் (Open Recent)

இதனை க்ளிக் செய்தவுடன் நாம் கடைசியாக ஒர்க் (Work) செய்த சில ஃபைல்கள் வரும். அதில் நமக்கு தேவையானவற்றை செலக்ட் செய்து, நேரிடையாக அந்த ஃபைலை தேர்ந்தெடுக்கலாம்.

க்ளோஸ் **(Close)**


தற்போது துவக்கி ஒர்க் (Work) செய்து கொண்டிருக்கும் ஃபைலை முற்றிலுமாக மூடிவிட இந்த கட்டளை உதவுகிறது. கடைசியாக செய்கின்ற ஒர்க் சேவ் செய்யாதிருந்தால், சேவ் (Save) செய்யலாமா என்று ஒரு எச்சரிக்கை வருகிறது. ஓ.கே. செய்தால் அந்த ஃபைல் சேவ் (Save) செய்யப்பட்டு க்ளோஸ் செய்யப்படுகிறது.

சேவ் **(Save) (Control + S)**

இதில் ஃபைலில் நாம் ஒர்க் (work) செய்தவற்றை சேமித்துக் கொள்ள உதவுகிறது.

சேவ் ஆஸ் **(Save as)**

புதிதாக துவக்கிய ஒர்க் (work) அல்லது ஏற்கனவே சேவ் செய்துள்ள ஒர்க் வேறு பெயரில் சேவ் செய்வதற்கு இந்த கட்டளை உதவுகிறது.



எந்த ஒரு நிலையிலும் ஃபைல் ஒன்றினை துவக்கியுள்ள நேரத்தில் இதனை க்ளிக் செய்தால் சேவ் ஆஸ் என்ற பெயரில் ஒரு டயலாக் பாக்ஸ வருகிறது. அதில் ஃபைல் நேம் (File Name) பகுதியில் ஒரு பெயரை கொடுத்துக் கொள்ளவும். இதற்கு முன் சேவ் இன் (Save in) பகுதியில் ஃபைல் சேவ் செய்யப்பட வேண்டிய

இடத்தை செலக்ட் செய்து கொள்ள வேண்டும். ஃபைல் நேம் (File Name) பகுதியில் பெயரை கொடுத்து சேவ் (Save) பட்டனை அழுத்தினால் ஃபைல் சேவ் (Save) செய்து வைக்கப்படுகிறது.


## சேவ் எ காபி (Save a Copy)

இக்கட்டளை மூலம் நாம் உருவாக்கிய ஃபைலை மற்றொரு பதிப்பு எடுத்து சேவ் (Save) செய்து கொள்ளலாம்.

## பிளேஸ் (Place)

ஃபைலில் Work செய்யும்போது, அதில் குறிப்பிட்ட இடங்களில் புகைப்படங்கள், டெக்ஸ்ட் போன்றவற்றை புகுத்திக் கொள்ளலாம்.

## எக்ஸ்போர்ட் (Export)





இதனை க்ளிக் செய்தால் சில குறிப்பிட்ட ஃபார்மேட்கள் இருக்கும். இதில் நமக்கு தேவையான ஃபார்மேட்டை செலக்ட் செய்து கொள்ளலாம்.

## எக்ஸ்போர்ட் ஃபார் (Export For)

இதனை க்ளிக் செய்தால் குறிப்பிட்ட ஃபார்மேட்கள் இருக்கும். இதில் நமக்கு தேவையான ஃபைல்களை தேவையான ஃபார்மேட்டில் (Format) சேவ் செய்து கொள்ளலாம்.

### அடோப் பி.டி.எஃப். (Adobe PDF Presets)





இன்டிசைன் ஃபைல்களை பி.டி.எஃப் ஃபைல்களாக பதிவேற்றம் செய்யக்கூடிய வழிமுறைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் நமக்குத் தேவையான வழிமுறையை செலக்ட் செய்து பிடிஎஃப் ஃபைலாக பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

### க்ராஸ் மீடியா எக்ஸ்போர்ட் (Cross-media Export)

இந்த கட்டளையானது, இன்டிசைன் ஃபைல்களை, எக்ஸ்.எம்.எல்., எச்.டி.எம்.எல்., ட்ரீம்வீவர் போன்ற ஃபார்மேட்களில் பதிவேற்றம் செய்து கொள்ளப் பயன்படுகிறது.


### டாக்குமெண்ட் செட்டப் (Document Setup)

இன்டிசைனில் துவக்கியுள்ள அல்லது புதிதாக உருவாக்கவுள்ள பக்கங்களின் அளவுகள் மற்றும் பிற தேவைகளை மாற்றிக் கொள்ள இந்த கட்டளை உதவுகிறது.




### ஃபைல் இன்ஃபோ (File Info)

இன்டிசைனில் நாம் உருவாக்கிய வேலை (Work) பற்றிய தகவல்களை சேவ் (Save) செய்வதற்கு இந்த கட்டளை பயன்படுகிறது. இதனை க்ளிக் செய்தால் ஒரு சில ஆப்ஷன்ஸ் (Options) வரும். இதில் நமக்கு தேவையான வற்றை தேர்வு செய்து கொள்ளலாம்.





**பிரிண்ட் பிரிசெட்ஸ் (Print Presets)**

இன்டிசைனில் பிரிண்ட் கொடுக்கும்போது, அந்த பிரிண்ட் ஆனது எந்த அளவு, எந்த முறையில் பிரிண்ட் (Print) தேவைப்படுகிறது என்பதை தேர்வு செய்து, அதனை எடிட் (Edit) செய்வதற்கு இந்த கட்டளை உதவுகிறது.

**பிரிண்ட் (Print)**


இன்டிசைனில் செய்து முடித்த வேலையை பிரிண்ட் (Print) ஆக அவுட்புட் (Output) எடுப்பதற்கு உதவும் கட்டளையாகும். புத்தக வேலைகள் அனைத்திற்கும் இந்த கட்டளை பெருமளவிற்கு உதவுகிறது.



மேலும், இவற்றில் பல நமது கம்ப்யூட்டருடன் (Computer) இணைக்கப்பட்டுள்ள, பிரிண்டரின் (Printer) தன்மை, தரத்தின் அடிப்படையில் செயல்படக் கூடியதாக இருக்கும்.

பிரிண்ட் புக்லெட் **(Print Booklet)**

நாம் உருவாக்கிய ஃபைலில் பிரிண்ட் ஆனது கொடுக்கும்போது, அந்த பிரிண்ட் ஆனது நம்முடைய தேவைக்கேற்ப அவுட்புட் (Output) வருவதற்கு அதனை எடிட்




(Edit) செய்து கொள்வதற்கு உதவும் கட்டளையாகும்.

எக்ஸிட் **(Exit) (Ctrl + Q)**


இதனை க்ளிக் செய்தால் ஃபைலில் ஓர்க் (Work) செய்யும்போது, அந்த Work அனைத்தும் மறைக்கப்பட்டு இன்டிசைன் ஃபைலிலிருந்து வெளியே வருவதற்கு உதவும் கட்டளையாகும்.

இதனை செலக்ட் செய்யும்போது, உங்கள் ஒர்க் (Work) சேவ் செய்யப் படாமலிருந்தால் சேவ் செய்யச் சொல்லி, ஒரு எச்சரிக்கை வரும். இதனை ஓ.கே. செய்தால், இது இரு நிலைகளிலும் செயல்படும். அதாவது, உங்களது ஒர்க் ஏற்கனவே ஒரு பெயர் கொடுத்து சேவ் செய்யப்பட்டு, பிறகு இன்டிசைன் மூடப்படுகிறது.

■■■

# எடிட் மெனு

# Edit Menu




### அன்டு க்ளியர் (**Undo Clear**)

இன்டிசைனில் ஒரு ஃபைலில் ஒர்க் (Work) செய்து கொண்டிருக்கும்போது, கடைசியாக செய்த வேலை தேவையில்லையெனில், இதற்கு முந்தைய வேலைக்கு செல்வதற்கு இந்த கட்டளை உதவுகிறது.

### ரீடு ஆட் நியு ஐட்டம் (**Redo Add New Item**)

இதனை க்ளிக் செய்தால் ஃபைலில் ஒர்க் செய்யும்போது குறிப்பிட்ட இடத்தில் Undo Clear கொடுத்த இடங்களில் அதனுடைய பழைய ஒர்க் திரும்ப வரவழைப்பதற்கு பயன்படும் கட்டளையாகும்.

### கட் (**Cut**)

பல ஃபைல்களில் ஒர்க் (Work) செய்யும்போது, ஒரு ஃபைலிலிருந்து மற்றொரு ஃபைலுக்கு ஒரு புகைப்படத்தையோ, டெக்ஸ்டையோ கொண்டு செல்வதற்கு பயன்படும் கட்டளையாகும்.


### எடிட் இன் ஸ்டோரி எடிட்டர் (**Edit in Story Editor**)

ஃபைலில் வேலை (Work) செய்து கொண்டிருக்கும்போது, ஒரு குறிப்பிட்ட இடங்களில் டெக்ஸ்ட் (Text) கொடுக்க வேண்டியிருப்பின், அந்த இடத்தை தேர்வு செய்து, டெக்ஸ்ட், நிரப்புவதற்கு (Apply) இந்த கட்டளை பயன்படுகிறது. இதனை க்ளிக் செய்தவுடன் இந்த ஃபைலின் மேல் பகுதியில் ஒரு பாக்ஸ் (Box) தெரியும். அதனுள் நாம் டெக்ஸ்ட் டைப் செய்தால் அது வேலை செய்து கொண்டிருக்கும் ஃபைலில் Apply ஆகும்.

குயிக் அப்ளை **(Quick Apply)**

இதனை க்ளிக் செய்தவுடன் சில Options வரும். இதில் நமக்கு தேவையானவற்றை தேர்வு செய்து எடிட் (Edit) செய்யலாம்.


ஃபைண்ட் / சேஞ்ச் **(Find / Change)**




இதனை க்ளிக் செய்தால் நான்கு வகையான Options வரும். இவற்றில் நமக்கு தேவையானவற்றை செலக்ட் செய்து, எடிட் (Edit) செய்து கொள்வதற்கு இந்த கட்டளை பயன்படுகிறது.

ஸ்பெல்லிங் **(Spelling)**

டெக்ஸ்ட் ஆனது டைப் செய்யும் போது, ஒரு சில வார்த்தைகள் தவறாக இருப்பின், அந்த வார்த்தைகளை சரி செய்து கொள்வதற்கு இந்த கட்டளை உதவுகிறது.





மேலும், இதன் டயலாக் பாக்ஸ் மெனுவில் நான்கு பகுதிகள் உள்ளன. பிழைகளை பார்த்துத் திருத்த இந்த நான்கில் ஒரு வகையை உபயோகிக்கலாம்.

ட்ரான்ஸ்பரென்சி பிலெண்ட் ஸ்பேஸ் (**Transparency Blend Space**)

இதனை க்ளிக் செய்தால் நாம் கொடுத்துள்ள பிரிண்ட் அவுட்புட் (Output) ஆனது CMYK அல்லது RGB எந்த முறை வேண்டும் என்று தேர்வு செய்வதற்கு இந்த கட்டளை உதவுகிறது. இன்டிசைனில் பெரும்பாலும் CMYK முறையே பயன்படுத்தப்படுகிறது.

மேலும், வண்ணங்களை பரப்பி நிறுத்தும்போது, ஒன்றுடன் ஒன்று, சேரும் இடங்களில் ஊடுருவி அமைப்பது எந்த முறையில் என்பதை இங்கு முடிவு செய்ய முடிகிறது.




கலர் செட்டிங்ஸ் (**Color Settings**), அசைன் புரொஃபைல்ஸ் (**Assign Profiles**), கன்வெர்ட் டு புரொஃபைல் (**Convert to Profile**)

இதனை க்ளிக் செய்தவுடன் சில Options வரும். இந்த Optionsகளை நம்முடைய தேவைக்கேற்ப எடிட் (Edit) செய்து கொள்ளலாம். மேலும், இந்த வகை Optionகள் பெரும்பாலும் டிஃபால்ட்டாக (Default) இருப்பதே சிறந்ததாகும்.

கீபோர்ட் ஷார்ட்கட்ஸ் (**Keyboard Shortcuts**)

இன்டிசைன் ஃபைலில் விரைவாக வேலைகளை மவுசின் உதவியின்றி செய்து முடிக்க இந்த கீபோர்ட் ஷார்ட்கட்ஸ் பயன்படுகிறது.

